# சமுதாயத் தொண்டாற்றியவர்கள்

## 1. ஈ.வெ. ரா. பெரியார்

- ஈ.வெ.ரா என்பதன் விரிவு ஈரோடு வெங்கடப்பர் (மகன்) இராமசாமி.
- பெரியார் தோற்றுவித்த இயக்கம் பகுத்தறிவாளர் சங்கம் ஆகும்.
- பெரியாரின் பெற்றோர் வெங்கடப்பர் – சின்னதாயம்மாள்.
- இளமையிலே மகாத்மா காந்தியின் தொண்டராகி காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்.
- கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார். கள் இறக்குவதைத் தடுப்பதற்காகத் தனக்குச் சொந்தமான தென்னை மரங்கள் எல்லாவற்றையும் வெட்டிச் சாய்த்தார். தன் தோளில் கதர் துணிகளை சுமந்து விற்றார்.
- மேல் ஜாதி, கீழ் ஜாதி என்ற வேறுபாடுகளை அகற்றி **மக்கள் அனைவரும் மனித ஜாதி** என்னும் ஒரினமாக மாற வேண்டும் என்று பாடுபட்டார்.
- சிறு குழந்தைகளையும் வாங்க, போங்க என மரியாதையுடன் அழைப்பார்.
- பெரியார் மரியாதையையும், சுயமரியாதையும் தம்மிரு கண்களாகக் கருதினார்.
- கேரளாவில் தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலய நுழைவிற்காகப் போராடி வெற்றி பெற்றதனால், **வைக்கம் வீரர்** என்று அழைக்கப்பட்டார்.
- கீழ் ஜாதி – மேல் ஜாதி வேற்றுமை நீங்க, தீண்டாமைக் கொடுமைகள் அகல, எல்லோருக்கும் கல்வி தேவை; எல்லோரும் கல்வி பெறுதல் வேண்டும் என்றார்.
- பெண்களை மதிக்க வேண்டும் ஆண்களுக்கு நிகராக பெண்கள் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும் என்றார்.
- பெண்களுக்கு நகையோ, அழகான உடையோ முக்கியமில்லை; அறிவும் சுயமரியாதையும் தான் மிக முக்கியம் என்றார்.
- பெண்கள் கல்வி கற்பதுடன் நில்லாமல், மற்போர், குத்துச்சண்டை முதலே விளையாட்டுக்களையும் கற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்றார்.
- அரசு பணி, இராணுவம், காவல்துறை முதலியனவற்றிலும் பெண்களை சேர்த்தல் வேண்டும் என்றார்.
- அறிவு என்பது வளர்ந்து கொண்டே இருக்கும்; எனவே புதியனவற்றை ஏற்றல் வேண்டும் என்றார்.
- 1925 சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தார்.
- டாக்டர் எஸ் தருமாம்பாள் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மகளிர் கூட்டத்தில் ஈ.வெ.ரா அவர்களுக்கு பெரியார் என்ற பட்டம் வழங்கப்பட்டது.
- இவருடைய காலம் 17.09.1879 முதல் 24.12.1973 வரை ஆகும்.
- தம் வாழ்நாளில் இவர் நடைப்பயணம் மேற்கொண்டு மக்களுக்காக உரையாற்றி சமுதாய தொண்டாற்றினார்.

⇒ **நடைப்பயணம் பற்றிய குறிப்புகள்**

| | |
|---|---|
| **நாட்கள்** | 8600 |
| **தொலைவு** | 13,12,000 கிலோமீட்டர் |

www.tnpscgroup4.in

| | |
|---|---|
| **பங்கேற்ற கூட்டங்களின் எண்ணிக்கை** | 10,700 |
| **உரையாற்றிய நேரம்** | 21,400 மணி நேரம் |

- 1970 ஆம் ஆண்டு சமூக சீர்திருத்த செயல்பாடுகளுக்காக ஐக்கிய நாடுகள் அவையின் யுனெஸ்கோ விருது பெரியாருக்கு வழங்கப்பட்டது.
- நடுவன் அரசு 1978ல் பெரியாரின் உருவம் பொறித்த அஞ்சல் தலையை வெளியிட்டு சிறப்பித்துள்ளது.
- பெரியாரின் பெண் விடுதலைச் சிந்தனைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம் ஒன்று அடிப்படை தேவைகள் மற்றும் அகற்றப்பட வேண்டியவை

⇒ **அடிப்படை தேவைகள்**

- பெண்கல்வி, பெண் உரிமை, சொத்துரிமை, அரசு பணி

⇒ **அகற்றப்பட வேண்டியவை**

- குழந்தைத் திருமணம், மனக்கொடை, கைம்மை வாழ்வு
- ஒரு நாடு வளத்துடன் இருக்க வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும். ஒழுக்கம் என்பதும் கற்பு என்பதும் பெண்களுக்கு மட்டும் என்று இல்லாமல் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவாகும்.
- பெண்களை வீட்டில் முடக்கி வைத்து நாட்டு நடப்பை அறிய விடாமல் செய்ததே பெண்கள் முன்னேற்றத்திற்கு பெருந்தடையாகும்.
- பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை மட்டும் மன்று; சமூக மாற்றத்திற்கு மிக இன்றியமையாதாகும். பெண்கள் கல்வி கற்றலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படாது.
- ஆண்கள் பெண்களை படிக்க வைப்பதோடு, அவர்களுக்கு உலகப் படிப்பையும், ஆராய்ச்சிப் படிப்பையும் தாராளமாகக் கொடுக்க வேண்டும். நாட்டில் உள்ள கேடுகளில் எல்லாம் பெருங்கேடு பெண்களைப் பகுத்தறிவற்ற ஜீவன்களாய் வைத்திருக்கும் கொடுமையாகும். இந்த இழிநிலை ஒழிக்கப்பட வேண்டும்.
- பெண்கள் உரிமை பெற்று புது உலகை படைக்க வேண்டும். பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைத்துக் கொண்டிராமல், சமூகத்திற்கும் தொண்டாற்றிப் புகழ் பெற வேண்டும்.
- தமிழர்களிடம் பரவியுள்ள பெருநோயான மணக்கொடை(வரதட்சணை) ஒழிக்கப்பட வேண்டும்.
- பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்பட வேண்டும். பெண்ணடிமைக்கு முக்கிய காரணம் சொத்துரிமை மறுப்பேயாகும். அதற்காக அவர்கள் கிளர்ச்சி செய்ய வேண்டும்.
- பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பெருங்கொடுமைகளுள் ஒன்று குழந்தை மணமாகும். அதை ஒழிக்க வேண்டும் சிற்றில் சிதைத்து விளையாடும் பருவத்தில் பெற்றோர் செய்யும் வேதனை விளையாட்டுக் குழந்தை மணம் என்று கூறி அதனைத் தடுக்கப் பாடுபட்டார்.
- கணவனை இழந்தோர் மறுமணம் செய்து கொள்ளாமல் கைம்மை முறையை


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

கடைப்பிடித்ததும் பெண்கள் முன்னேற்றத்தை தடை செய்தது.

- அனைத்து துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.
- அரசாங்கத்தின் அனைத்து துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் போது தான் நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும்.

⇒ **பாரதிதாசன் பெரியாரை பற்றி எழுதிய கவிதை**

**தொண்டு செய்து பழுத்த பழம்**

**தூயதாடி மார்பில் விழும்**

**மண்டைச் சுரப்பை உலகு தொழும்**

**மனக் குகையில் சிறுத்தை எழும்.**

**பெரியார் எதிர்த்தவை:** இந்தி திணிப்பு, குலக்கல்வி திட்டம், தேவதாசி முறை, கள்ளுண்ணல், குழந்தை திருமணம், மணக்கொடை.

**பெரியார் விதைத்த விதைகள்:**

- கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு, பெண்களுக்கான சொத்துரிமை, குடும்ப நலத்திட்டம், கலப்பு திருமணம், சீர்திருத்த திருமண சட்ட ஏற்பு.

**பெரியார் இயக்கமும் இதழ்களும்;**

| | |
|---|---|
| தோற்றுவித்த இயக்கம் | சுயமரியாதை இயக்கம் |
| தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு | 1925 |
| நடத்திய இதழ்கள் | குடியரசு, விடுதலை உண்மை ரிவோல்ட் (ஆங்கில இதழ்) |

⇒ **பெரியாரின் சிந்தனைகள்:**

- அறிவுலகின் திறவுகோல், பகுத்தறிவு பாதைக்கு வழிகாட்டி, மனிதநேயத்தின் அழைப்பு மணி, ஆதிக்க சக்திகளுக்கு எச்சரிக்கை ஒலி, சமூக சீர்கேடுகளை களையும் மாமருந்து.

⇒ **தந்தை பெரியாரின் சிறப்பு பெயர்கள்:**

- பகுத்தறிவு பகலவன்
- சுயமரியாதைச் சுடர் வைக்கம் வீரர்
- பெண்ணின போர் முரசு
- ஈரோட்டு சிங்கம்
- புத்துலகத் தொலைநோக்காளர்
- தெற்காசியாவின் சாக்ரடீஸ் – 27. 06.1970 இல் ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ நிறுவனம் தந்தைப் பெரியாருக்கு தெற்காசியாவின் சாக்ரடீஸ் என்று பட்டம் வழங்கி சிறப்பித்தது.

⇒ **பெரியாரின் கூற்றுகள்:**

- சாதி உணர்வு ஆதிக்க உணர்வை வளர்க்கிறது.
- மற்றவர்களின் உரிமைகளைப் பறிக்கிறது.
- மனிதர்களை இழிவுபடுத்துகிறது.
- அந்தச் சாதி என்ற கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும்.
- அறிவியலுக்கு புறம்பான செய்திகளையும், மூட பழக்கங்களையும் பள்ளிகளில் கற்றுத் தரக் கூடாது.
- சுய சிந்தனை ஆற்றலையும், தன்னம்பிக்கையையும் வளர்க்கும் கல்வியை கற்றுத் தர வேண்டும்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கேற்ற நூல்கள் தமிழில் படைக்கப்பட வேண்டும்.
- மொழியோ நூலோ இலக்கியமோ எதுவானாலும் மனிதனுக்கு மானம், பகுத்தறிவு, வளர்ச்சி, நற்பண்பு ஆகிய தன்மைகளை உண்டாக்க வேண்டும்.
- திருக்குறளைப் படிப்பவர்கள் சுயமரியாதை உணர்ச்சியைப் பெறுவார்கள்.

## 2. அறிஞர் அண்ணா

- தமிழக மக்களால் பேரறிஞர் என்று அழைக்கப்பட்ட சி.என்.அண்ணாதுரை அவர்கள் 15.09.1909 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் பிறந்தார்.
- இவர் நீதிக் கட்சியின் வாயிலாக அரசியலில் நுழைந்தார்.
- சாதி, சமய மற்றும் ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற கொள்கையுடன் வாழ்ந்தார்.
- தமிழ் பற்று மிகுந்த இவர் இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்து கொண்டு இந்தி மொழிக்கு எதிராக குரல் கொடுத்தார்.
- 1944–ல் நீதி கட்சியின் பெயரை திராவிடர் கழகம் என மாற்றம் செய்தார்.
- 1949–ல் திராவிட முன்னேற்றக் கழகம் என்று புதிய கட்சியை தொடங்கி 1967–ல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று தமிழகத்தின் முதலமைச்சர் ஆனார். தனது ஆட்சி காலத்தில் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.
- சித்திரை முதல் தேதியை தமிழ் புத்தாண்டாக அறிவித்தார்.
- 14.04.1967ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் நாள் சென்னை மாநிலம் என்பதை தமிழக அரசு அல்லது தமிழகம் என பெயர் மாற்றம் செய்தார்.
- புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள செகரடேரியட் என்பதை தலைமைச் செயலகம் என பெயர் மாற்றம் செய்தார்.
- சத்தியமேவே ஜெயதே என்ற அரசு குறிக்கோளை **வாய்மையே வெல்லும்** என்று மாற்றி அறிவித்தார்.
- இதுபோன்ற ஸ்ரீ, ஸ்ரீமதி மற்றும் குமாரி போன்ற சமஸ்கிருத வார்த்தைகளுக்கு மாற்றாக திரு, திருமதி மற்றும் செல்வி தமிழ் சொற்களை அறிவித்தார்.
- அண்ணாவின் தலைமைப்பண்பு, நிர்வாக நேர்மை, அரசியல் பண்பாடு ஆகியவற்றை சிறப்பிக்கும் வகையில், அண்ணாமலை பல்கலைக்கழகம் 1968 –ஆம் ஆண்டு கௌரவ **டாக்டர் பட்டம்** அளித்து அண்ணாவை பாராட்டியது.
- இத்தகைய பெருமைமிகு அண்ணாதுரை, பிப்ரவரி 3, 1969 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.
- பேரறிஞர் அண்ணா தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகச்சிறந்த பேச்சாளராக விளங்கினார். எழுத்தாளர் ஆன அண்ணாவை **தென்னகத்து பெர்னாட்ஷா** என்று அழைத்தனர்.
- சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் முதல் இன்ப ஒளி வரை பல படைப்புகளைத் தந்தவர்.
- தம்முடைய திராவிட சீர்திருத்தக் கருத்துக்களை நாடகங்கள், திரைப்படங்கள் மூலமாக முதன்முதலில் பரப்பியவர் இவரே.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- 1935–இல் சென்னை, பெத்தநாயக்கன்பேட்டை, கோவிந்தப்ப நாயக்கன் பள்ளியில் ஆங்கில ஆசிரியராக ஓர் ஆண்டு பணியாற்றினார்.

⇒ **ஆசிரியராக பணியாற்றிய இதழ்கள்**
ஹோம்ரூல், ஹோம்லேண்ட், நம் நாடு, திராவிட நாடு, மாலை மணி, காஞ்சி.

- **துணை ஆசிரியராக பணியாற்றிய இதழ்கள்**
குடியரசு, விடுதலை.

- முதலமைச்சராக பொறுப்பேற்றதும் இருமொழிச் சட்டத்தை உருவாக்கினார்.

⇒ **அண்ணாவின் புகழ் பெற்ற பொன்மொழிகள்:**

  - ➢ மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மனம் உண்டு,
  - ➢ கத்தியை தீட்டாதே உந்தன் புத்தியை தீட்டு,
  - ➢ வன்முறை இரு பக்கமும் கூர் உள்ள கத்தியாகும்
  - ➢ எதையும் தாங்கும் இதயம் வேண்டும்,
  - ➢ சட்டம் ஒரு இருட்டறை அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு
  - ➢ மக்களின் மதியை கெடுக்கும் ஏடுகள் நமக்கு தேவையில்லை. தமிழரை தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை தன்னம்பிக்கை ஊட்டி மதிப்பை பெருக்கும் நூல்கள் தேவை.
  - ➢ நம் நல்ல வரலாறுகளை படித்தால் தான் இனமுலத்திலே புது முறுக்கு ஏற்படும்.
  - ➢ இளைஞர்களுக்கு பகுத்தறிவும் சுயமரியாதையும் தேவை
  - ➢ இளைஞர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகள்
  - ➢ நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும் இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.

## 3. முத்துராமலிங்க தேவர்

| | |
|---|---|
| **பெயர்** | முத்துராமலிங்க தேவர் |
| **பெற்றோர்** | உக்கிரபாண்டியனார்<br>இந்திராணி அம்மையார் |
| **ஆசிரியர்** | குறைவற வாசித்தான் |
| **பிறந்த இடம்** | ராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் |
| **காலம்** | 30–10 1908 முதல்<br>30–10–1963 வரை. |

- இளம் வயதிலேயே இவரது அன்னை இறந்தார். அதனால் பாட்டியின் அரவணைப்பிலும், இஸ்லாமிய பெண்மணி ஒருவரின் அரவணைப்பிலும் வளர்ந்தார்.
- தொடக்க கல்வியை கமுதியில் உள்ள கிறிஸ்தவ பாதிரியார்களிடமும், உயர்நிலைப் பள்ளியை சில ஆண்டுகள் பசுமையிலும் பயின்றார்.
- பின்னர் ஐக்கிய கிறிஸ்துவ பள்ளியிலும், பத்தாம் வகுப்பு அரசு உயர்நிலைப் பள்ளியிலும் படித்தார்.
- ராமநாதபுரத்தில் பிளேக் நோய் பரவியது இவருடைய கல்வியும் நின்று விட்டது. பட்டறிவை மிகுதியாக பெற்ற இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்லமை பெற்றார்.
- சொற்பொழிவாற்றும் திறமையும், சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கி சுடுதல், ஜோதிடம், மருத்துவம் ஆகியவற்றை கற்று


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

அறிந்ததுடன் இளமையிலே அரசியலிலும் ஆர்வம் கொண்டார்.

- 32 சிற்றூர்களில் தனக்கு சொந்தமாக இருந்த நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கினார்.
- நிலக்கிலார் ஒழிப்பு, ஆலய நுழைவு போராட்டத்திற்காக போராடினார். சமபந்தி முறைக்கு ஊக்கமளித்தார். இவர் காலத்தில் ஆங்கில அரசால் குற்றப் பரம்பரை என்று ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களுக்காக போராடி விடுதலை பெற்று தந்தார்.
- சாதியையும், நிறத்தையும் பார்த்து மனிதனை மனிதன் தாழ்வு படுத்துவது பெருங்கொடுமை. ஆண்டவன் மனித குலத்தை படைத்தானே தவிர, சாதியையும், நிறத்தையும் அல்ல, சாதியும், நிறமும், அரசியலுக்கும் இல்லை, ஆங்கிலத்திற்கும் இல்லை, என்று கூறினார்.
- வங்காள சிங்கமான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களை தம் அரசியல் வழிகாட்டியாக கொண்டார்.
- விடுதலைப் போர் கடுமையாக இருந்த காலத்தில், ஆங்கில அரசு வட இந்தியாவில் திலகருக்கும், தென்னிந்தியாவில் முத்து ராமலிங்கருக்கும் **வாய்ப்பூட்டுச் சட்டம்** போட்டது.
- திரு.வி.கல்யாண சுந்தரனார் இவருக்கு **தேசியம் காத்த செம்மல்** என்ற பட்டத்தை வழங்கினார்.
- பொது வாழ்விற்கு திருமண வாழ்வினை தவித்தார். 1937, 1946, 1952, 1957, 1962, ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றி பெற்றார்.
- வீரம் இல்லாத வாழ்வும், விவேகம் இல்லாத வீரமும், வீணாகும் என எடுத்துரைத்தார். வேதாந்த பாஸ்கர், பிரணவ கேசரி, சன்மார்க்க சண்ட மாருதம், இந்து பூத்த சமய மேதை என்று பலவாறாக பாராட்ட பெற்றவர்.
- பனை மரத்திலிருந்து விழுந்து பிழைத்தவனும் உண்டு, வயல் பரப்பில் வழுக்கி விழுந்து இறந்தவனும் உண்டு. என்ற வாழ்க்கை நிலையாமை தத்துவத்தை கூறியுள்ளார்.
- மனிதனின் மனநிலையை இருள், மருள், தெரு, அருள் எனக் குறிப்பிடுகிறார்.

⇒ **முத்துராமலிங்கர் வாழ்ந்த முறை**

- ✓ விவேகானந்தரின் தூதராக,
- ✓ நேதாஜியின் தளபதியாக,
- ✓ சத்தியசீலராக,
- ✓ முருக பக்தராக,
- ✓ ஆன்மீகப் புத்திரராக,
- ✓ தமிழ் பாடும் சித்தராக,
- ✓ தென்பாண்டி சீமையின் முடிசூடா மன்னராக,
- ✓ நீதி வழுவா நேர்மையாளராக,
- ✓ புலமையில் கபிலராக,
- ✓ வலிமையில் கரிகாலனாக,
- ✓ கொடையில் கர்ணனாக,
- ✓ பக்தியில் பரமஹம்சராக,
- ✓ இந்தியத்தாயின் நன்மகனாக வாழ்ந்தார்.

- தன் சொத்துக்களை 17 பாகங்களாக பிரித்து தனக்கு ஒரு பாகத்தை மட்டும் வைத்துக்கொண்டு, மீதி 16 பாகங்களையும் 16 பேருக்கு இனாம் சாசனமாக எழுதி வைத்தார்.

- தமிழக அரசு இப்பெருமகனாருக்கு சென்னையில் இவரின் திருவருட்சிலையை நிறுவி அச்சாலைக்கு இவர் பெயரை சூட்டி உள்ளது.
- 06–09–1939–இல் இவரின் விருப்பத்திற் – கிணங்க மதுரைக்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் வருகை புரிந்தார்.
- 1995–இல் நடுவன் அரசு இவருடைய உருவம் பொறித்த அஞ்சல் தலையை வெளியிட்டது.

⇒ **<u>நேதாஜியின் பொன்மொழிகள்</u>**

- அநீதிகளுக்கும் தவறான செயல்களுக்கும் மன உப்ப இடம் தருதல் மிகப்பெரிய குற்றமாகும். நீங்கள் நல்வாழ்வை தந்து ஆகவேண்டும் என்பதுதான் காலத்தால் மறையாத சட்டமாகும்.
- எந்த விலை கொடுத்தாவது சமத்துவத்திற்கு போராடுவதே மிகச்சிறந்த நற்குணமாகும்.
- மனதை மலர வைக்கும் இளங்கதீரவனின் வைகறைப்பொழுது வேண்டுமா? அப்படியானால் இரண்டு நேரங்களில் வாழ கற்றுக்கொள்!
- விடுதலை நாள் உண்டாகும் மகிழ்ச்சியும், சுதந்திரத்தினால் உண்டாகும் மனதிருப்தியும் வேண்டுமா? அப்படியானால் அதற்கு விலை உண்டு. அவற்றிற்கான விலை துன்பமும் யாகமும் தான்.
- 1943–45 ஆம் ஆண்டுகளில் சென்னையில் இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்த 18 இளைஞர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

அவர்களில் 18 வயதே ஆன **ராமு மற்றும் அப்துல் காதர் தூக்கிலிடப்படுவதற்கு முன்பு கூறிய கூற்றுகள் பின்வருமாறு:**

நான் என் உயிரை கொடுப்பதற்கு கொஞ்சமும் கவலைப்படவில்லை. ஏனெனில் நான் கடவுளுக்கு எதிராக ஒன்றும் செய்யவில்லை.

**– ராமு**

- வாழ்வின் பொருள் தெரிந்தால் தான் மனிதன் மேல்நிலை அடைவான். நாட்டிற்காக உயிர் நீத்த முழு நிலவினை போன்ற தியாகிகள் முன்பு நாங்கள் மெழுகுவர்த்திகள் தான்.
- இந்திய தேசிய ராணுவத்தில் இருந்து வான்படை தாக்குதலுக்காக நேதாஜியால் 45 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்கள் பயிற்சிக்காக ஜப்பானில் உள்ள இம்பீரியல் மிலிட்டரி அகடாமிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்த பயிற்சி பிரிவின் பெயர் **டோக்கியோ கேடட்ஸ்**
- பேராசிரியர் மா.சு.அண்ணாமலை **இந்திய தேசிய ராணுவம், தமிழர் பங்கு** என்ற நூலுக்காக தமிழக அரசின் பரிசு பெற்றவர் இவர் தலைமையில் எடுக்கப்பட்ட குறும்படங்கள் சர்வதேச அளவில் பரிசு பெற்றன.
- நேதாஜியே தமிழ் வீரர்களை பாராட்டி நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்திய தமிழனாக பிறக்க வேண்டும், என்று கூறி இருக்கிறார் பசும்பொன் முத்துராமலிங்கர்.
- நேதாஜி தலைமையில் இருந்த இந்திய தேசிய ராணுவத்திற்கு, தமிழகத்தில் இருந்து பெரும்படையை திரட்டி அனுப்பி வைத்தவர் பசும்பொன் முத்துராமலிங்கர்.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**“இந்திய தேசிய ராணுவத்தின் இதயமும், ஆத்மாவும் தமிழர்கள் தான்”**

**– தில்லான் (இந்திய தேசிய ராணுவத்தின் படைத்தலைவர்)**

**“மலேயாவிலுள்ள தமிழர்களின் ரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது”**

என்று சர்ச்சில் ஏளனம் செய்தனர். அதற்கு நேதாஜி இந்த தமிழினம் தான் ஆங்கிலேயர்களை அழிக்கும் என்று பதில் கூறினார்.

### 4. காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் சாகிப்

- திருநெல்வேலியில் உள்ள பேட்டை என்ற ஊரில் இவர் ஜூன் 5 1896 இல் பிறந்தார். இவருடைய தந்தை பெயர் மியா கான் ராவுத்தர்.

**⇒ நாட்டுப்பற்று**

- திருச்சி தூய வளானர் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த இவர் காந்தியடிகளின் அழைப்பை ஏற்று ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொள்வதற்காக தனது கல்வியை பாதியிலேயே விட்டுவிட்டார்.
- இந்தியாவிற்கும் சீனாவுக்கும் இடையே 1962–ல் போர் நடைபெற்ற போது தனது ஒரே மகனை போர்முனைக்கு ஆயத்தமாக இருப்பதாக தெரிவித்து அப்போது பிரதமர் ஜவஹர்லால் நேருவிற்கு காயிதே மில்லத் கடிதம் எழுதினார்.
- **காயிதே மில்லத்** என்ற அரபு சொல்லுக்கு **சமுதாய வழிகாட்டி** என்பது பொருளாகும்.

**⇒ அரசியல் பணி**

- 1046 முதல் 1952 வரை அப்போதைய சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினராக இருந்து சிறப்பாக பணியாற்றினார்.
- இந்திய அரசியலமைப்பு உருவாக்கம் குழு உறுப்பினராகவும் பணியாற்றினார். இந்திய விடுதலைக்கு பின் மாநிலங்களவை உறுப்பினர், மக்களவை உறுப்பினர் என பல பொறுப்புகளில் இருந்து மக்களுக்காக தொண்டு செய்தார்.

**⇒ மொழிக் கொள்கை**

- இந்திய விடுதலைக்குப் பின் நாட்டின் ஆட்சி மொழியை தேர்வு செய்வது தொடர்பான கூட்டம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. அதிகமான மக்கள் பேசும் மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று ஒரு சாரரும் பழமையான மொழியை ஆட்சி மொழியாக வேண்டும் என்று ஒரு சாரரும் கூறினர்.
- அதற்கு, **காயிதே மில்லத்** அவர்கள், பழமையான மொழிகளிலே ஒன்றைத்தான் ஆட்சி மொழியாக்க வேண்டும் எனில் அது தமிழ் மொழிதான் என்று நான் உறுதியாக கூறுவேன். திராவிட மொழிகள்தாம் இந்த மண்ணிலே முதன்முதலாக பேசப்பட்ட மொழிகள்.
- அவற்றுள் மிகவும் இலக்கிய செறிவு உடைய தமிழ் மொழி தான் மிகப் பழமையான மொழி. எனவே தமிழ் மொழியைத்தான் நாட்டின் ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்று உரையாற்றினார்.

**⇒ கல்விப் பணி**

www.tnpscgroup4.in

- **'கல்வி மிகுந்திடில் கழிந்திடும் மடமை'** என்ற முதுமொழிக்கு ஏற்ப பல கல்வி நிறுவனங்களை உருவாக்கினார்.
- திருச்சியில் உள்ள ஜமால் முகமது கல்லூரி கேரளாவில் புறம் கல்லூரி ஆகியவை தொடங்குவதற்கு இவரே காரணமாக இருந்தார்.

⇒ **தொழில் துறை**

- தொழில் துறை அறிவை பெற்றிருந்த காயிதே அவர்கள் இந்திய நாட்டின் கனிம வளங்களை பற்றி நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்தார்.
- அதனால் இந்திய அரசு கனிம வளங்களை பயன்படுத்தும் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியது அதன் மூலமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் பலர் வேலை வாய்ப்பினை பெற்றனர்.

⇒ **எளிமை**

- பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு தொடர்வண்டி, பேருந்து போன்ற பொது போக்குவரத்து ஊர்திகளை பயன்படுத்தினர்
- அவருக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட மகிழ்ந்து மற்றும் பெருந்தொகை ஆகியவற்றை தான் தொடங்கி வைத்த கல்லூரிக்கு அளித்துவிட்டார்.
- தனது இல்லத்தில் நடைபெற்ற திருமணங்களை மிகவும் எளிய முறையிலேயே நடத்தினார் பெண் வீட்டாரிடம் மணக்கொடை (வரதட்சனை) பெறாமலேயே அவர் இல்லத் திருமணங்கள் நடைபெற்றன.
- மணக்கொடை வாங்கும் திருமணங்களில் கலந்து கொள்ள மாட்டேன் என வெளிப்படையாக அறிவித்தார்.

⇒ **நேர்மை**

- மிகவும் நேர்மையாக வாழ்ந்த பண்பாளர் – ரான அவர் தனது அலுவலகத்தில் உள்ள அஞ்சல் தலையை கூட தனது தனிப்பட்ட முறையிலான கடிதத்திற்கு உபயோகம் – படுத்த மாட்டார். தம் வாழ்நாள் முழுதும் சமய நல்லிணக்கத்தை பேணி வந்தார்.

⇒ **பாராட்டுரைகள்**

- **அறிஞர் அண்ணாவின் கூற்று:**

தமிழக அரசியல் வானில் கவ்வி இருந்த காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராக காயிதே முகமது இஸ்லாமில் அவர்கள் திகழ்கிறார்.

- **தந்தை பெரியாரின் கூற்று**

இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது அவர் நல்ல உத்தமமான மனிதர்.

**5. <u>காமராஜர்</u>**

⇒ **காமராஜரின் பிறப்பு**

- காமராஜர் விருதுநகரில் குமாரசாமி சிவகாமி இனையருக்கு மகனாய் 1903 ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் நாள் பிறந்தார்.

⇒ **காமராசரின் அரசியல் ஈடுபாடு**

- நாள்தோறும் செய்தித்தாள்களைப் படித்தும் அரசியல் கூட்டங்களில் தலைவர்களின் சொற்பொழிவுகளை கேட்டு தம் அரசியல் அறிவை வளர்த்துக் கொண்டார்.
- மெய் கண்டான் புத்தகசாலைக்குச் சென்று லெனின் கருப்பாண்டி நெப்போலியன்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

ஆகியோரின் வாழ்க்கை வரலாறு படித்து திறமையாக வாதம் செய்ய கற்றுக்கொண்டார்.

- தேசிய இயக்கமான காங்கிரஸில் தொண்டராக சேர்ந்து அரசியல் வாழ்வை தொடங்கினார். கட்சிக் கூட்டங்களை நடத்தினார்.
- ஊர்வலங்களில் கலந்து கொண்டார். கொடி பிடித்தார். சைமன் குழு எதிர்ப்பு, உப்பு சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம், ஆகிய போராட்டங்களில் பங்கு கொண்டு 11 ஆண்டுகள் சிறையில் கழித்தார்.
- சத்தியமூர்த்தியை அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார். 1937–ல் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

⇒ **தலைவர்களை உருவாக்குபவர்**

- 1939–இல் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆனார்.
- 1945–ல் பிரகாசம், 1947–ல் ஓமந்தூர் ராமசாமி, 1949–ல் குமாரசாமி ஆகியோர் முதலமைச்சராக பதவி ஏற்க காமராசர் காரணமாக இருந்தார்.
- 1964–இல் இந்திய பிரதமராக இருந்த நேரு மறைந்த பின்பு லால் பகதூர் சாஸ்திரியை போட்டியின்றி பிரதமராக தேர்ந்தெடுக்க வழிவகை செய்தார் 1967–ல் லால் பகதூர் சாஸ்திரி மறைந்த பின்பு இந்திரா காந்தியை பிரதமர் ஆக்கினார்.

⇒ **முதலமைச்சர் காமராசர்**

- 1954 முதல் 1963 வரை காமராசர் முதலமைச்சராக இருந்தார். இவரது அமைச்சரவையில் முன்னாள் குடியரசு தலைவர் ஆர்.வெங்கட்ராமன் தொழில் அமைச்சராகவும், சி.சுப்பிரமணியம் கல்வி அமைச்சராகவும் இருந்தனர்.

⇒ **காமராசர் ஆட்சியில் தொழில் முன்னேற்றம்**

- கிண்டி, அம்பத்தூர், ராணிப்பேட்டை முதலிய இடங்களில் பெரிய தொழிற்ப்பேட்டைகளும் மாவட்டம் தோறும் சிறிய தொழில் பேட்டைகளும் அமைக்கப்பட்டன.
- வேளாண்மைக்கென பாசன வசதிகள் செய்யப்பட்டன. அணைகள் கட்டப்பட்டன. தமிழகத்தில் கூட்டுறவு சங்கங்கள் இல்லாத சிற்றூர்களே இல்லை எனும் நிலை உருவானது.
- நெசவுத்தொழில் வளர்ச்சிக்காக பல திட்டங்களை தீட்டினர். நெய்வேலி நிலக்கரி சுரங்க தொழிற்சாலை, இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை, சர்க்கரை ஆலை, சோடா உப்பு தொழிற்சாலை, ஆவடி ரயில்வே வாகன தொழிற்சாலை, மேட்டூர் காகித தொழிற்சாலை, முதலியன இவரது ஆட்சியில் தொடங்கப்பட்டன.

⇒ **காமராசரின் கல்வி தொண்டுகள்**

- காமராசர் காலத்தில் கட்டாய கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது பள்ளி வேலை நாட்கள் 180 –லிருந்து 200 ஆக உயர்த்தினார்.
- தொடக்கப் பள்ளிகளில் மதிய உணவு திட்டத்தை கொண்டு வந்தார். மூடப்பட்டிருந்த 6000 தொடக்கப் பள்ளிகளை திறக்க ஆணையிட்டதுடன் இலவச கட்டாய கல்விக்கான சட்டத்தை இயற்றியனார்.


www.tnpscgroup4.in

- பள்ளி சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டு பள்ளிகளுக்கான அடிப்படைப் பொருள்களும் கருவிகளும் வாங்கப்பட்டன.
- உயர்நிலைப்பள்ளி வரை இலவச கல்வி கொண்டுவரப்பட்டது. உயர் உடற்பயிற்சி கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிகள், பள்ளிகள் ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள் தொடங்கப்பட்டன.
- மருத்துவ கல்லூரி முதலான தொழிற்க் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வட்டியில்லா கடனளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில்நுட்ப கல்லூரி தொடங்கப்பட்டது. மாணவர்களிடையே ஏற்றத்தாழ்வு இல்லாமல் இருக்க சீருடை திட்டத்தை அறிமுகம் செய்தார்.
- கிளை நூலகங்கள் பலவற்றை தொடங்கினார்.
- இவரை **கல்விக்கண் திறந்தவர்** என தந்தை பெரியார் பாராட்டினார்.

⇒ **காமராசர் ஆற்றிய சமூக தொண்டுகள்**

- தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை திருத்தி சாகுபடி செய்யும் தொழிலாளிக்கு 60ரூ பங்கு கிடைக்கச் செய்தார்.
- நில உச்சவரம்பு 30 ஏக்கர் என குறைக்கப்பட்டது நில முதலாளிகளிடமிருந்து உபரி நிறங்கள் பெறப்பட்டு நிலம் இல்லாததற்கு பிரித்தளிக்கப்பட்டன.
- மேலும் மீனவர், கருப்பட்டி காய்ச்சுபவர், கைத்தறியாளர், குயவர் முதலிய சிறு தொழிலாளர் நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன
- நகர்ப்புற வீடு கட்டும் திட்டம், இலவச மருத்துவ வசதி முதலெனவும் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

⇒ **காமராசர் திட்டம் (கே பிளான்)**

- காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்த மூத்த தலைவர்கள் அமைச்சர் பதவியில் இருந்து விலகிக்க கட்சிப் பணியில் ஈடுபட வேண்டும் என 1962 இல் காமராஜர் திட்டம் ஒன்றை கொண்டு வந்தார் அது காமராசர் திட்டம் என வழங்கப்பட்டது.

⇒ **காமராசருக்கு தமிழக அரசு செய்த சிறப்புகள்**

- மதுரை பல்கலைக்கழகம் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் கட்டியது
- சென்னை மெரினா கடற்கரை சாலையில் சிலை அமைத்தது.
- காமராசர் வாழ்ந்த சென்னை இல்லமும், விருதுநகர் இல்லமும் நினைவு இல்லமாக ஆக்கப்பட்டது.
- காமராசரின் பிறந்தநாள் கல்வி வளர்ச்சி நாளாக அறிவிக்கப்பட்டது.
- சென்னை தேனாம்பேட்டையில் காமராசர் அரங்கம் நிறுவப்பட்டது.
- சென்னை உள்நாட்டு விமான நிலையத்திற்கு காமராசர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

www.tnpscgroup4.in

- கன்னியாகுமரியில் காமராசருக்கு 02– 10– 2000–ஆம் ஆண்டு மணி மண்டபம் அமைக்கப்பட்டது

⇒ **காமராஜருக்கு நடுவணரசு செய்த சிறப்புகள்**

- 1976 இல் பாரத ரத்னா விருது அளித்தது நாடாளுமன்றத்தில் ஆளு உயர வெண்கலம் சிலை நிறுவியது.

⇒ **சிறப்பு பெயர்கள்**

- பெருந்தலைவா, கருப்பு காந்தி படிக்காத மேதை ஏழை பங்காளன் கர்மவீரர் தலைவர்களை உருவாக்குபவர்.

⇒ **காமராசர் மறைவு**

- காந்தியடிகள் மீது அளவற்ற அன்பு கொண்ட காமராசர் காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் தேதி மறைந்தார், மறைந்த ஆண்டு 1975.

**6. <u>அம்பேத்கர்</u>**

- மராட்டிய மாநிலத்தில் கொங்கன் மாவட்டத்தில் உள்ள 'அம்பவாடே' என்னும் சிற்றூரில் கிபி 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் நாள் அம்பேத்கர் பிறந்தார் அவரின் பெற்றோர் இராம்ஜி சக்பால்– பீமா பாய்.
- மகாபாரத பீமனைப் போல் தங்கள் மகனும் சிறந்த வீரனாக வரவேண்டும் என்று பீமாராவ் என பெயர் பெயரிட்டனர்.
- பீமாராவ் தான் பள்ளியில் படிக்கும் போது அவர் மீது அளவு கடந்த அன்பு செலுத்தியதோடு வழிகாட்டியாக இருந்த ஆசிரியரான அம்பேத்கரின் பெயரை தம் பெயருடன் இணைத்து பீமராவ் ராம்ஜி அம்பேத்கார் என மாற்றிக் கொண்டார்.
- உயர்நிலைக் கல்வியை முடித்த அம்பேத்கர் சிறிது காலம் பரோடா மன்னரின் அரண்மனையில் உயர் அலுவலராக பணியாற்றினார். பின்னர் பரோடா மன்னர் சாயாஜி ராவ் உதவியுடன் உயர்கல்வி கற்பதற்காக அமெரிக்கா சென்றார்.
- கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பொருளாதார அரசியல் தத்துவம் சமூகவியல் ஆகிய பாடங்களை கற்றார்.
- இந்தியாவில் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் அம்பேத்கர் எழுதிய கட்டுரையை அவர் சிறு புத்தகமாக வெளியிட்டார் அச்சில் வெளிவந்த அம்பேத்கரின் முதல் நூல் இதுவே ஆகும்.
- இந்தியாவின் தேசிய பங்கு விதம் என்று ஆய்வுக்கு கொலம்பியா பல்கலைக்கழகம் அவருக்கு முனைவர் பட்டம் வழங்கியது.

⇒ **அம்பேத்கரின் கல்வி தகுதிகள்**

- 1908–இல் எல்.பின்ஸ்டன் பள்ளியில் தன்னுடைய உயர்நிலைப்பள்ளி படிப்பை முடித்தார்.
- 1912–ல் பம்பாய் ஹெல்த் இன்ஸ்டன்ட் கல்லூரி இளங்கலை பட்டம் பெற்றார்.
- 1915–ல் அமெரிக்கா கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டம் பெற்றார்.
- 1916–இல் லண்டனில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.
- 1918–இல் மும்பையில் சிறிது காலம் பொருளாதார பேராசிரியராக பணியாற்றியவர் மீண்டும் லண்டன் சென்று அறிவியலில் முதுகலை பட்டமும் பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- லண்டனில் பட்டம் பெற்று இந்தியா திரும்பி வந்த அம்பேத்கர் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டு கட்டணம் இன்றி ஏழைகளுக்கு வழக்காடி நீதியை பெற்று தந்தார்.
- 1927 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் நாள் மராட்டியத்தில் மகாத்து குளத்தில் நடத்திய தண்ணீர் எடுக்கும் போராட்டத்தை நடத்தினார்.
- 1924–ல் கேரளாவில் வைக்கத்தில் பெரியார் நடத்திய ஒடுக்கப்பட்டோர் ஆலய நுழைவுப் போராட்டமும், அம்பேத்கர் நடத்திய தண்ணீர் எடுக்கும் போராட்டமும் இந்தியாவில் மனித உரிமைக்காக முதலில் ஆங்கிலேயரை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டங்களாகும்.
- விடுதலைக்கு முன் தன்னாட்சி தகுதியை இந்தியாவிற்கு வழங்க வேண்டும் என்று ஆங்கிலேயரிடமும் அச்சமின்றி ஆணித்தரமாக கூறினார். மூன்று வட்ட மேசை மாநாடுகளிலும் கலந்து கொண்டவர் அம்பேத்கர்.

**⇒ வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் ஆற்றிய உரை**

- “அரை வயிற்று கஞ்சிக்கு அருளப்படும் ஊமைகளின் உறுப்பினனாக நான் பேசுகிறேன்” என்ற அம்பேத்கர்,
- தொடர்ந்து **“மாற்றார் ஆதிக்கத்தை நீக்கி, மக்களால் ஆளப்படும் மக்களாட்சியே நாங்கள் விரும்புகிறோம்; எஜமான மாற்றத்தை அல்ல. எங்கள் கைகளில் அரசியல் அதிகாரம் வந்தால் ஒழிய எங்கள் குறைகள் நீங்காது”** என்றார்.

**⇒ கல்வி வளர்ச்சியில் அம்பேத்கர்**

- 1946–இல் மக்கள் கல்வி கழகத்தை தோற்றுவித்தார் மும்பையில் இவரது அரிய முயற்சியால் உருவான சித்தார்த்த உயர் கல்வி நிலையத்தில் இன்றைய அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்து பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.
- கற்பித்தல் அறிவியல் முறைகளுக்கு உகந்ததாக இருக்க வேண்டும். விருப்பு வெறுப்பற்ற முறையில் கற்பித்தல் நிகழல் வேண்டும். மாணவனுக்குள் தகவல்களை திணிப்பதாக கல்வி இருத்தல் கூடாது, கல்வியானது மாணவனின் ஊக்கத்தை தூண்டுவதுடன் தனித்தன்மையை வெளிக் கோணறுவதற்காக இருத்தல் வேண்டும்.

**⇒ சட்ட மாமேதை**

- சுதந்திர இந்திய அமைச்சரவையில் நேருவின் விருப்பத்திற்கு இணங்க அமைச்சராக பொறுப்பேற்றார்.
- இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை உருவாக்க அமைக்கப்பட்ட ஸ்கூலில் இருந்து அனைவரும் விலகிக் கொள்ள இறுதி அம்பேத்கர் ஒருவர் ஒருவரே தனியாளாக இருந்து அந்த ஒப்பற்ற பணியை செய்து முடித்தார்.
- அம்பேத்கர் அரசியல், சட்டம், சமூகம், பொருளாதாரம், தத்துவம், வரலாறு, வணிகம், கல்வி, சமயம் என அனைத்து துறைகளிலும் நிகரற்ற அறிஞராகத் திகழ்ந்தார்.
- ஒரு நாளில் 18 மணி நேரத்தை கல்வி கற்பதற்காகவே செலவழித்தார். லண்டனில் படிக்கும் போது நூலகத்தில் காலையில்

www.tnpscgroup4.in

முதல் ஆளாக உள்ளே சென்று மாலையில் கடைசியாக வெளியே வருவார்.

- பொருளியலில் பெருமுழவை பெற்று விளங்கியதால் பல்வேறு பொருளாதார சிக்கல்களை அணுகியும் நுணிகியும் ஆராய்ந்து பார்த்து இந்திய பொருளாதார துறையில் முன்னேறுவதற்கு புதிய புதிய கருத்துக்களை வெளிப்படுத்தினார்.
- இவர் **இந்தியாவின் தேசிய பங்கு வீதம்** என்ற சிறந்த பொருளாதார நூலை வெளியிட்டார். அந்நூல் பொருளியல் துறைமுக பேராசிரியர்களுக்கும், வல்லுனர்களுக்கும் பெரு உதவியாக இருக்கிறது.
- ‘சாதி என்பது எல்லாம் வல்ல ஒருவன் கட்டளையால் தோன்றியதன்று சில குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு ஆட்பட்ட வேரூன்றிவிட்ட வளர்ச்சியாகும் சாதி கலையப்பட வேண்டிய கலை” என்று அவர் கருதினார்.
- இந்திய பொருளாதார மேம்பாட்டிற்கு சாதி என்பது நன்மையே தராது இந்தியர்களின் நலத்திற்கும் மகிழ்ச்சிக்கும் சாதி என்னும் நோய் தீங்கு விளைவிக்கின்றது.
- மக்களிடையே ஒருமைப்பாட்டை சீர்குலைத்து விட்டது. இதை அவர்கள் உணரும்படி செய்து விட்டால் போதும் அதுவே எனக்கு நிறைவை தரும் என்றார்.
- அம்பேத்கர் ஜனநாயகத்தின் மறுபெயர் தான் சகோதரத்துவம்; சுதந்திரம் என்பது சுயேசியாக நடமாடும் உரிமை; உயிரையும் உடனையும் பாதுகாக்கும் உரிமை; அது எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவது சமத்துவமாகும் என்று கூறினார்.
- முதல் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்வதற்கு புறப்படும் முன் என் மக்களுக்கு நியாயமாக என்ன கிடைக்க வேண்டுமோ அதற்காக போராடுவேன் அதே சமயத்தில் சுயராஜ்ஜிய கோரிக்கைகளை முழு மனத்துடன் ஆதரிப்பேன் என்று கூறினார்.
- அண்ணல் அம்பேத்கர் இந்திய நாட்டின் ஒளிமிகுந்த எதிர்காலத்தை பற்றிய கனவு கண்ட இலட்சிய மனிதர்.
- தான் கண்ட லட்சிய கனவுகளை அறிவுத்திறனாக உறுதிப்படுத்தியவர்.
- உயரிய ஆளுமைத் திறனை கொண்டவர்.
- கூர்ந்த அறிவும், வன்மையுமுடையவர், சமுதாயம் எனும் மரத்தின் வேரை சாதிப்புழுக்கள் அழித்துவிடாமல் தடுத்த நச்சுக்கொள்ளி மருந்து அவர்.
- சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் அம்பேத்கர்.
- புத்த சமய கொள்கைகள் மீது ஈடுபாடு கொண்டார். இலங்கையில் நடைபெற்ற புத்ததுறவிகள் கருத்தரங்கில் கலந்து கொண்டார்.
- உலக பவுத்தம், சமய மாநாடுகளிலும் கலந்து கொண்டு 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 14ஆம் நாள் நாக்பூரில் லட்சக்கணக்காண மக்களோடு புத்த சமயத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

- அவர் எழுதிய புத்தரும் அவரின் தம்மமும் என்ற புத்தகம் அவரது மறைவுக்கு பின் 1957 இல் வெளியானது.
- 1956 டிசம்பர் 6ஆம் தேதி அம்பேத்கர் மறைந்தார். இந்திய அரசு 1990–ல் அவருக்கு பாரத ரத்னா விருது வழங்கியது.

⇒ **அண்ணல் அம்பேத்கர் குறித்து தலைவர்களின் பாராட்டுரைகள்**

1. **ஈவேரா பெரியார்**

- டாக்டர். அம்பேத்கர் உலகத் தலைவர்களில் ஒருவர், பகுத்தறிவு செம்மல், ஆராய்ச்சியின் சிகரம், மக்களின் மாபெரும் வழிகாட்டி, இப்படிப்பட்ட பெருந்தலைவரை போல வேறு யாரையும் நாம் காண முடியாது.

2. **ஜவர்கலால் நேரு**

- பகுத்தறிவு துறையில் அவருக்கு இணை அவரே ஆசிய கண்டத்திலேயே மிகப்பெரிய தனிமனித நூலகத்தை அமைத்த பெருமை இவரையே சாரும்.

3. **ராஜேந்திர பிரசாத்**

- அண்ணல் அம்பேத்கர் தன்னலமற்ற நிலையில் மிகவும் ஆர்வத்துடன் உற்சாகத்துடனும் உத்வேகத்துடன் தன்னந்தனியாக செயல்பட்டார் தமக்கு கொடுக்கப்பட்ட பணியில் கருமமே கண்ணாக இருந்து செயல்பட்டார் என்பதை நான் நன்கு உணர்ந்தவன்.

⇒ **அம்பேத்கரின் பொன்மொழி**

“நான் வணங்கும் தெய்வங்கள் மூன்று;
முதல் தெய்வம் அறிவு;
இரண்டாவது தெய்வம் சுயமரியாதை;
மூன்றாவது தெய்வம் நன்னடத்தை”

**இரட்டைமலை சீனிவாசன்**

- இந்தியர்களுக்கு அரசியல் உரிமை வழங்குவதை பற்றி முடிவு செய்வதற்காக 1930 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இங்கிலாந்தில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டில் ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாக அம்பேத்கருடன் தமிழகத்தைச் சேர்ந்த இரட்டைமலை சீனிவாசன் கலந்து கொண்டார்.

www.tnpscgroup4.in



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in